# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா. 2 (LW2)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுரேஷ் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | தர்மராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பபட்டியில் குடியிருந்து டிரைவராக தொழில் செய்து வருகிறேன். சென்ராயன் இறந்த அன்று காலை 5.00 மணி இருக்கும். அவர் இறந்த அன்று காலை அவரது மனைவி என்னை அழைத்தார், சென்ராயன் ஏதோ செய்து கொண்டார் என்று என்னிடம் சொன்னார், அப்போது வீட்டில் லைட்டு போடாமல் இருட்டாக இ ருந்தது. நான் லைட்டு போடும் படி சொன்னேன். அ ப்போது அவரது மனைவி லைட்டு போட்டு விட்டு வெளியே சென்றுவிட்டார். நான் வெளிச்சத்தில் பார்த்தபோது சென்ராயன் கழுத்தில் சேலை சுற்றி இருந்தததது. மேலே பார்த்த போது மின்விசிறியில் சேலை அறுத்து கிடந்தது. கால் கிழக்கே தலை மேற்கே இருந்தது. கை வடக்கு பக்கமாக இருந்தது. சென்ராயன் இரத்த வெள்ளத்தில் கீழே கிடந்தார். அப்போது நான் அவரது மணிக்கட்டை பிடித்து பார்த்தேன். கை சில் என்று இருந்தது. அப்போது சென்ராயன் உயிரற்ற நிலையில் இருந்தார். உடனே நான் 2ஆம் எதிரியை நீ சென்ராயனை என்ன செய்தாய் என்று கேட்டேன். அப்போது பதில் கூறாமல் அழுகாமல் இருந்தார், அதன் பின்னர் நான் எனது ஊர் தலைவரிடம் தொலைபேசியில் தகவல் கொடுத்தேன். பின்னர் நான் பணி நிமிர்த்தமாக வெளியில் சென்றுவிட்டேன். சம்பவம் நடப்பதற்கு முன்னர் 1ஆம் எதிரிக்கும் 2ஆம் எதிரிக்கும் கள்ள தொடர்பு இருந்ததாக பிரச்சனை இருந்தது. அது குறித்து அ.சா.1 நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் பின்னார் காவல்நிலையத்தில் 2ஆம் எதிரியை சமாதானம் செய்து சென்ராயன் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் மீண்டும் 1ஆம் 2ஆம் எதிரிகளுக்கு இடையே தொடர்பு இருந்ததால் அ.சா.1 1ஆம் எதிரியை செருப்பில் அடித்தார். அதன் பின்னர் சம்பவம் நடத்தது. நான்

1ஆம் 2ஆம் எதிரி வீட்டின் பக்கத்தில் குடியிருப்பதால் சென்ராயன் வீட்டில் நடக்கும் பிரச்சனையை எனக்கு நன்கு தெரியும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை 2 முறை விசாரித்தார்கள்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகார் குறித்து போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் காவல் நிலையம் சென்றேனா அல்லது போலீசார் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. இறந்த 2,3 நாட்களிலே என்னை போலீசார் கடைக்கு அருகில் வைத்து விசாரித்தார்கள். அப்படி விசாரித்த போது மேற்படி விபரங்கள் அனைத்தையும் நான் கூறினேன். அதன் பின்னார் 3 முதல் 4 மாதத்திற்குள்ளாக என்னை மீண்டும் விசாரித்தார்கள். காலை 5.00 முதல் 5.25 மணி வரை நான் அங்கு இருந்தேன். அதன் பின்பு சவாரி இருந்ததால் நான் ஊருக்கு சென்றுவிட்டேன். அவர் இறந்து விட்டதாக நான் தான் கையை பிடித்து முதலில் பார்த்து தெரிந்து கொண்டேன். நான் பார்த்த போது 30 முதல் 40 பேர் அங்கு இருந்தார்கள். நான் கையை மட்டும் தான் பார்த்தேன் வேறு எதுவும் நான் அசைத்து பார்க்கவில்லை. இறந்த அன்று மற்றும் அடுத்த நாள் போலீசார் விசாரித்த விபரங்கள் பற்றி எனக்கு தெரியும். எங்களது ஊரின் VAO பெயர் பாண்டி, அவர் மற்றும் வருவாய்த்துறையில் இருந்தது வந்து விசாரித்தார்கள். அன்றைய தினம் போலீசில் புகார் கொடுத்த விபரம்பற்றி எனக்கு தெரியும். இறந்தவருக்கு குடிபழக்கம் இருந்த விபரம் எனக்கு தெரியாது. இறந்த சென்ராயனுக்கு செல்வி மற்றும் கண்மணி ஆகியோருடன் கள்ள தொடர்பு இருந்ததாக சொல்கிறார்கள் என்றால் அது பற்றி நான் கேள்வி படவில்லை. இறந்த பிறகு சுமார் 2 மாதம் அ.சா.1ன் வீட்டில் தான் 2ஆம் எதிரி இருந்தார் என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் 2ஆம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அ.சா.1 எதிரிகளுக்கு எதிராக மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இறந்து போனவருக்கு கடன் மற்றும் கள்ளதொடர்பு பிரச்சனை இருந்தது என்றும் அது குறித்து எனக்கு தெரியும் என்றும் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த போனவர் 1ஆம் எதிரியிடம் ரூ.5 லட்சம் வரை கடன் வாங்கி இருந்தார் என்றும், அதன் பின்னிட்டு இறந்தவரின் அப்பாவிடம் (அ,சா.1) கடனை திருப்ப கேட்டு பிரச்சனை செய்ததால் அந்த பிரச்சனையில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிரியிடமும் அ.சா.1 பணம் கேட்டு பிரச்சனை செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் தெரிந்தும் அ.சா.1 தெரிந்தவர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 17:00:59 +0530

Additional District Judge,

Dindigul.